ஐ.நா.சபை

# மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள்

சகல ஐ.நா. அங்கத்துவ நாடுகளும் 2015க்கு முன் அடைய உறுதியளித்திருக்கும் இலக்குகள்:

## 1. மோசமான வறுமையையும் பட்டினியையும் ஒழித்தல்

- தினமும் ஒரு டொலருக்குக் குறைந்த செலவில் வாழும் மக்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைக்கப்படும்.
- பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைக்கப்படும்.

## 2. அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை வழங்குதல்

- சகல பிள்ளைகளும் ஆரம்பப் பாடசாலைக் கல்வியை முழுமையாகப் பெறுவது உறுதி செய்யப்படும்.

## 3. ஆண்-பெண் சமத்துவத்தை ஊக்குவித்தல்

- 2005க்கு முன் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வித்துறையிலும் 2015க்கு முன் சகல மட்டங்களிலும் ஆண்-பெண் பாகுபாடு நீக்கப்படும்.

## 4. சிறுவர்களின் மரண விகிதத்தைக் குறைத்தல்

- 5 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளின் மரண விகிதம் மூன்றிலிரண்டு பங்கு குறைக்கப்படும்.

## 5. மகப்பேற்றுத் தாய்மாரின் ஆரோக்கியத்தை முன்னேற்றுதல்

- மகப்பேற்றுத் தாய்மாரின் மரண விகிதம் நான்கில் மூன்று பங்கு குறைக்கப்படும்.

## 6. HIV/AIDS, மலேரியா போன்ற நோய்களைத் தடுத்தல்

- HIV/AIDS பரவுவதைத் தடுத்து அதனை ஒழிக்க முயற்சி செய்யப்படும்.
- மலேரியா போன்ற நோய்களைத் தடுத்து அவற்றை ஒழிக்க முயற்சி செய்யப்படும்

(1990 ஆம் ஆண்டின் நிலையை அடிப்படையாக வைத்தே இந்த இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன)

## 7. சுற்றாடல் வளங்களைப் பேணுதல்

- நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக் கோட்பாடுகள் தேசிய கொள்கைகளிலும் நிகழ்ச்சித் திட்டங்களிலும் சேர்த்துக்கொள்ளப்படும். சுற்றாடல் வளங்களின் இழப்புக்கள் ஈடுசெய்யப்படும்.
- சுத்தமான குடிநீரைப் பெறும் வாய்ப்பு இல்லாத மக்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைக்கப்படும்.
- 2020 ஆம் ஆண்டிற்குள், சேரிகளில் வாழும் சுமார் 100 மில்லியன் மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுத்தப்படும்.

## 8. அபிவிருத்திக்கான உலகப் பங்காளித்துவத்தை ஏற்படுத்துதல்

- திறந்த வர்த்தக மற்றும் நிதி அமைப்பு முறையொன்று மேலும் விருத்தி செய்யப்படும். இது விதிமுறைகளுக்கு அமைந்ததாகவும் நம்பிக்கையானதாகவும் பாரபட்சம் அற்றதாகவும் இருக்கும். நல்லாட்சி, அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு ஆகியவற்றிற்கான தேசிய, சர்வதேச உறுதிப்பாட்டையும் இது உள்ளடக்கும்.
- அபிவிருத்தி குன்றிய நாடுகளின் விசேட தேவைகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். ஏற்றுமதித் தீர்வைகளில் இருந்து விலக்களித்தல், அதிகரித்த கடன் நிவாரணம், இருதரப்புக் கடன்களைப் பதிவழித்தல், வறுமை ஒழிப்பில் அக்கறை காட்டும் நாடுகளுக்குத் தாராளமான அபிவிருத்தி உதவிகளை வளங்குதல் என்பவற்றையும் இது உள்ளடக்கும்.
- நிலத்தாற் சூழப்பட்ட அல்லது சிறு தீவுகளான வளர்முக நாடுகளின் விசேட தேவைகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.
- வளர்முக நாடுகளின் கடன் பிரச்சினைக்குத் தீர்வுகாண தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- வளர்முக நாடுகளின் ஒத்துழைப்புடன், இளைஞர்களுக்கென முறையான, ஆக்கபூர்வமான தொழில்கள் உருவாக்கப்படும்.
- மருந்து உற்பத்தி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், வளர்முக நாடுகளில் அத்தியாவசிய மருந்துகள் நியாயமான விலையில் வழங்கப்படும்.
- தனியார் துறையின் ஒத்துழைப்புடன், புதிய தொழில்நுட்பங்களின் நன்மைகள், குறிப்பாக, தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பங்களின் பயன்கள் மக்களுக்குக் கிடைக்க வழிசெய்யப்படும்.

மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் பற்றி மேலும் அறிந்துகொள்ள பின்வரும் வெப்தளத்தை நாடுங்கள்: www.un.org/millenniumgoals